www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

TELO

# " போலிகளை இனம் காண்போம் "

12-3-86 ல் வெளியிடப்பட்ட அறிக்கை.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஸ்தாபன மோதல்களை வன்மையாக கண்டித்து வந்த நாம் ஸ்தாபனங்களின் ஐக்கியத்திற்காகவும் முன்னின்று செயலாற்றியும் வந்தோம். அவ்வாறு செயற்பட்டு வந்ததன் விளைவே ஈழத் தேசிய விடுதலை முன்னணியாகும். மிகக் குறைந்தபட்ச நிபந்தனைகளுடன் உருவான ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் மோதல்கள் உருவானதும் அவை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டமையும் மக்கள் அறிந்தவையே..

எனவேதான் எம் ஸ்தாபனத்திற்குள் ஏற்பட்ட குழப்ப நிலைமைகளையும் அதே அடிப்படையில் மக்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். சில தனி நபர்களினதும் குட்டி முதலாளிகளினதும் மாக்சிச வாதிகள் எனத் தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் சிவம், சிவராசா , ரத்தினம் போன்றோரினதும் தவறான பாதைக்கு எமது தோழர் தாஸ் இட்டுச் செல்லப்பட்டிருந்தார். அவர்களின் பிற்போக்குத்தனமான ஆலோசனைகள் காரணமாக பல இயக்க விரோத நடவடிக்கைகளை தாஸ் அவர்களும் அவரது சகாக்களும் 1985ம் ஆண்டு பங்குனி மாதம் முதல் மேற்கொண்டு வந்தனர். இதனால் ஏற்பட்ட சுகபோகங்களையும் அவர்கள் அனுபவிக்கத் தவறவில்லை.

இயக்கத்தின் நற் பெயருக்கு களங்கமேற்படுத்தும் வகையில் அவர்கள் நடந்துகொண்ட போதிலும் தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு மேலாக இவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். சமீப காலமாக நாம் பேச முற்பட்டபோதெல்லாம் எம்மை அலட்சியப்படுத்தி வந்துள்ளனர்.

இறுதியாக 11-3-86 இல் அன்று காலை 11 பேருடன் ஜீப்பில் வந்த இந்த அதிருப்தியாளர்கள் தவறுதலாக "கிரனேட்" வெடித்து காயமுற்றிருந்த எம் முக்கிய தோழருக்கு பாதுகாப்பாக நின்ற எமது தோழருடன் இவர்கள் முரண்பட்ட காரணத்தினால் இவர்கள் மேல் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதேவேளை அவர்களின் துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இச் சம்பவத்தின் போது மரணமடைந்த நீதவான் கிருபாகரனுக்கும், தாதிக்கும் (செல்வி. சுந்தரலிங்கம்) எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், வருத்தத்தினையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவ்வாறான அராஜகக் கும்பல்கள் தம்மை புரட்சிகர சக்திகளாக இனங்காட்டிக்கொண்டே இணைந்துகொள்வர். ஆனால் இவர்களின் அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக புரட்சிகர சக்திகள் போராட முற்படுகையில் அராஜக வாதிகள் தமக்கென குழுக்களை அமைத்து தம் சுய தேவைகளை பூர்த்தி செய்த வண்ணம் அப்பட்டமான பிற்போக்குத்தனத்தை மூடிமறைப்பதற்காகத் தான் வளர்ந்த ஸ்தாபனத்திற்கெதிராக போலித்தனமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பர்.

அராஜகவாதிகளை இனங்கண்டு வெளியேற்றுவதன் மூலமே தேசிய விடுதலைப்போராட்டத்தை செவ்வனே நடத்தமுடியும். எனவே மக்கள் இவ்வாறான அராஜக சக்திகளை இனம் கண்டு வெளியேற்றும் எமது முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

எம்முடன் சிற்சில சமயங்களில் தோளோடு தோள் நின்று ஒத்துழைத்து அதன் மூலம் புரட்சிகர சக்திகளாகத் தம்மை இனம் காட்டிக்கொண்ட இவ் அராஜக வாதிகள் மரணிப்பதை நாம் விரும்பவில்லை. அராஜக வாதிகளை மக்கள் மத்தியில் இனம் காட்டி விமர்சிப்பதன் மூலம் அந்நியப்படுத்த முடியும். ஆனாலும் இவர்களை அந்நிலையில் நடந்துகொண்ட முறையின் காரணமாக இவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டது.

" சிந்திப்போம் ....... விமர்சிப்போம் ..... செயலாற்றுவோம். "

- அரசியற்பிரிவு தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

மலர்: 56 இதழ் 187 | கொழும்பு குரோதன ஸ்ரீ மாசி மீ 28உ புதன்கிழமை (12-3-1986) ஹிஜ்ரி 1406 ஜ. ஆகிர் பிறை 30 P.O. Box 160 Phone: 20881

# யாழ். ஆஸ்பத்திரிக்குள் வைத்து எட்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

## இறந்தோரில் 6 பேர் இயக்க இளைஞரை கடத்த வந்தோராம்

## மற்றவர் நோயாளியான நீதிவான்

(யாழ். அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம், பெரியாஸ்பத்திரியில் நேற்று நடந்த திடீர் தீவிர துப்பாக்கிப் பிரயோகத்தால் வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிவான் எஸ். கிருபாகரன் உட்பட எட்டு பேர் கொல்லப்பட்டனர்.

> உண்மைக்கு மேடையோ அன்றி வெளிச்சமோ போட்டு காட்ட வேண்டியதில்லை; அது மிகவும் மகத்தானது; அது வெளிவருவதை எந்த சக்தியாலும் நிரந்தரமாய் தடுத்து விட முடியாது.
>
> — தோழர் தங்கத்துரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்தாம் வார்ட்டில் கடமையாற்றிக் கொண்டிருந்த பயிற்றப்பட்ட தாதி ஒருவரும் மற்றொரு ஊழியரும் கடும் காயங்களுக்குள்ளாகி தாதி பின்னர் மரணமானார்.

மேலும் நால்வர் சிறு காயங்களுக்குள்ளானார்கள்.

காலை 10 மணியளவில் மின்னல் என நடந்த முடிந்துவிட்ட இந்த திகில் கொலைச் சம்பவத்தால் ஆஸ்பத்திரியில் வேலை செய்த டாக்டர்கள், தாதிமார், மற்றும் ஊழியர்கள் மத்தியில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. பலர் செயலிழந்து காணப்பட்டனர்.

எல்லோரும் கூடி இதற்கு திரு முடிவு கட்ட வேண்டும். இன்றேல் நாம் இங்கு பாதுகாப்புடன் வேலை செய்ய முடியாது என்று ஊழியர் பலரும் அங்கலாய்த்தபடி திடீர் வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர்.

திடீர் வேலைநிறுத்தம்

நிலைமையை அறிந்த பதில் வைத்திய அத்தியட்சர் திரு. வி. எஸ். பத்மநாதன் உடன் ஊழியர், அதிகாரிகள் முதலானோரின் கூட்டத்தை கூட்டினார்.

ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படா விட்டால் அவர்களையும் நாம் இழக்க நேரிடும். எனவே அவசர சிகிச்சைகள் நடைபெற உதவ வேண்டும், என்று அவர் ஊழியர்களை மிக விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

இதன் பிரகாரம் அவசர வைத்திய கடமைகளை கவனிப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளை செய்வதென ஊழியர்களும் டாக்டர்களும் ஒருமனதாக இணங்கினர்.

இதன் பிரகாரம் அத்தியாவசிய சேவைகள் அங்கு நடந்தன.

ஏனைய ஊழியர்கள் தொடர்ந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

துப்பாக்கியுடன் பலரும் வருவதா?

இந்த வேலை நிறுத்தம் எப்பொழுது முடியும் என்று வேலை நிறுத்தக்காரர் ஒருவரிடம் கேட்ட பொழுது இந்த ஆஸ்பத்திரி வளவுக்குள் துப்பாக்கியுடன் பலரும் வந்து போகிறார்கள். இதனால்தான் இந்த துர்ப்பாக்கிய சம்பவம் நடந்துள்ளது. எனவே பொறுப்பான எவராவது முன் வந்து ஆஸ்பத்திரி வளவுக்குள் இனி எவரும் துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று உறுதியளிக்கும் வரை எமது வேலை நிறுத்தம் தொடரும் என்று பதிலளித்தார்.

காலை 8 மணி வரை காலக்கெடு

இன்று அதாவது புதன்கிழமை காலை 8 மணிக்கு முன் இந்த உறுதிமொழியை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினர்.

துப்பாக்கிச் சம்பவம் நிகழ்ந்த யாழ் ஆஸ்பத்திரி 10ஆம் வார்டிலும் சிற்றுண்டிச் சாலையிலும் இரத்த வெள்ளம் காணப்பட்டது. சிற்றுண்டிச்சாலைக்குள் வைத்து அறுவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் வெளியிலிருந்து அங்கு வந்தவர்கள் என கூறப்பட்டது.

தலையில் துப்பாக்கி சூட்டுக் காயத்துடன் யாழ் ஆஸ்பத்திரி பத்தாம் வார்டில் திங்களன்று ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவரை கடத்த சிலர் முயற்சித்ததாகவும் அப்பொழுதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாகவும் தெரிய வருகிறது.

துப்பாக்கி சூட்டின் போது துரதிர்ஷ்டவசமாக பலியான இவர் பத்தாம் வார்டில் நரம்பு சம்பந்தமான வியாதிக்கு சிகிச்சை பெற்று வந்தவராவார்.

பத்தாம் வார்டில் கடமையிலிருந்த பயிற்றப்பட்ட தாதியான செல்வி செல்வராணி சுந்தரலிங்கம் சிற்றூழியரான வைத்தி முருகன் ஆகிய இருவரும் படுகாயங்களுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ரி. ஜேசுதாஸன் என்ற மற்றுமொரு ஆஸ்பத்திரி ஊழியரும் காயமடைந்துள்ளார்.

நீதிவான் கிருபாகரன் (54 வயது) ஈ.சி.ஜி. மருத்துவ பரிசோதனைக்காக வார்டிலிருந்து வெளியேறி வந்த கொண்டிருந்த போதே துப்பாக்கி வேட்டுக்கு இரையாகி உள்ளார்.

சிற்றுண்டிச் சாலைக்குள் இறந்து கிடந்த 6 இளைஞர்களின்தும் சடலங்களும் அங்கிருந்து இனந் தெரியாதோரால் உடனடியாகவே அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. கடத்தப்பட இருந்த இளைஞரும் பின்னர் பாதுகாப்பான இடத்துக்கு சகபாடிகளால் அப்புறப்படுத்தப்பட்டார்.

இந்த பரபரப்பூட்டும் சம்பவத்தினால் ஆஸ்பத்திரி வட்டாரம் உட்பட யாழ் நகரமே சில மணி நேரங்கள் பரபரப்படைந்தன.

யாழ் பெரியாஸ்பத்திரியின் வரலாற்றிலேயே இப்படி ஒரு பாரதூரமான சம்பவம் நடந்தது இதுதான் முதல் தடவையாகும்.

# கோஷ்டி மோதல்

(நமது நிருபர்)

யாழ். ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பற்றி பாதுகாப்பு வட்டாரங்கள் எதுவித தகவலையும் உடனடியாக தெரிவிக்க மறுத்துவிட்டன.

ஒரே இயக்கத்திலிருந்து பிரிந்தோரே ஏனைய மற்றைய சகாக்களை சுட்டுக் கொன்றிருப்பதாக தமக்கு தெரியவந்திருப்பதாகவும், 'டெலோ' இயக்கத்திலிருந்து பிரிந்து தனியாக இயங்கி வந்த கோஷ்டியைச் சேர்ந்தோரே கொல்லப்பட்டிருப்பதாகவும் தமக்கு தெரியவந்திருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
## Thamil Eelam Liberation Organization

TELO

**13-3-86 இல் வெளியிடப்பட்ட அறிக்கை**

தற்சமயம் எமது ஸ்தாபனத்திற்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டினை பயன்படுத்தி ஒரு சில தனிநபர்கள் ஒருபகுதி தமிழ்மக்களினை எம்மீது வெறுப்படைய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் வெளிப்பாடே ஊர்வலமும், அதனைத்தொடர்ந்த துப்பாக்கிப்பிரயோகமுமாகும்.
நாம் மக்களின் மனோ நிலையை உணர்ந்தவர்கள். மக்கள் சக்தியின் வலிமையை உணர்ந்தவர்கள். இந்நிலையில் ஒன்று திரண்ட மக்கள் சக்திக்கெதிராக ஆயுதப்பிரயோகம் செய்யும் அளவுக்கு கேவலமானவர்கள் அல்ல. மக்கள் இதனை உணர்ந்து சூழ்நிலைகளை ஆராய்ந்து போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு ஆராயாது விடும் பட்சத்தில் வேறுசில பிற்போக்குவாத குழுக்களோ அன்றி தனி நபர்களோ மேற்கொள்ளும் சதிகளுக்கு அப்பாவி மக்களே பலியாவர். இவ்வாறான நபர்களின் வெற்றுப்பேச்சுக்கு அப்பாவி மக்கள் பலியாகாமல் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

**இப்பிற்போக்கு வாதிகள் எம்மீது சுமத்திய அபாண்டங்களுக்கு எமது பதில்**

14-3-86 அன்று தாஸிற்கு ஆதரவானவர்கள் என்ற போர்வையின் கீழ் சில சந்தர்ப்ப வாதிகள் வெளியிட்ட பிரசுரம் தொடர்பாக எமது நிலையை மக்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். இவ்வாறான சந்தர்ப்பவாதிகள் தாம் மேற்கொண்ட மக்களால் இனம் காணப்பட்ட நடவடிக்கைகளை பிரசுரத்தில் குறிப்பிட்டு எம்மைச் சாடி இருப்பது மக்களைப் பற்றிய இவர்களின் தவறான கணிப்பீட்டையே காட்டுகின்றது. எவ்வாறெனினும் அண்மைக்கால கோவிற் கொள்ளைகள், சந்நிதி அம்மன் கோவில் கொள்ளை, திருக்கேதீஸ்வர ஆலய கொள்ளை போன்றவை யாரால் நடத்தப்பட்டவை என்பது எல்லோரும் அறிந்ததே. அதே போல் ஈழ்த்தரமான கேவலமான அரசியற் படுகொலைகளான ஆலால், தருமர் ஆகியோரின் கொலைகளின் சூத்திரதாரிகளை நாம் இனம் காட்டாமலேயே புரிகின்ற நிலையில் மக்கள் உள்ளனர்.
இவ்வாறான முன்றும்தர சமுதாய துரோக வேலைகளினை நடாத்திமுடித்துவிட்டு எம்மீது இவர்கள் குற்றம் சாட்ட முற்படுகிறார்கள். இவ்வாறு நாம் சம்பந்தப்படாத நடவடிக்கைகளை வைத்து எம்மைச் சாடுவது இவர்களின் சந்தர்ப்ப வாத போக்கினையே காட்டுகிறது.
இவர்கள் இச்சந்தர்ப்பவாத போக்கினை கைவிட்டு ஆதாரத்துடன் நேரிடையாக தமது இலச்சினையின் கீழ் விமர்ச்சிப்பதையே நாம் விரும்புகிறோம்.

**எமது வேண்டுகோள்**

தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மிகவும் பாரதூரமானவை. இவை எக்காரணம் கொண்டும் தட்டிக்கழிக்க முடியாதவை. எனவே பொது நன்மை கருதி இக் குற்றவாளிகளை மக்கள் முன் இனம் காட்ட இவர்கள் முன்வர வேண்டும். வெறும் பிரச்சாரத்தின் மூலம் மக்களை ஏமாற்ற நினைப்பது முட்டாள்தனமாகும்.

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்